**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 401** **நாள்: 24.11.2025**

**சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிக்கான கணக்கீட்டுப் படிவங்களை 04.12.2025க்குள் வாக்காளர்களிடமிருந்து மீளப்பெற்று இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டியுள்ளதால், 04.12.2025 வரை காத்திராமல் அதற்கு முன்னதாகவே பூர்த்தி செய்த கணக்கீட்டுப் படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் வாக்காளர்கள் வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தத்திற்கான கணக்கீட்டுப் படிவங்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வாக்காளர்களுக்கு வழங்கும் பணியானது 4.11.2025 முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து வானொலி, ஆட்டோக்கள், மின்கல வாகனங்கள், சமூக வலைதளங்கள், நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சிகள், மின்னணு பலகைகள் மற்றும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த கணக்கீட்டுப் படிவங்களை பூர்த்தி செய்வதற்கு வாக்காளர்களுக்கு உதவிடும் வகையில் 25.11.2025 வரை அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் அமைக்கப்பட்டுள்ள வாக்காளர் உதவி மையங்களை வாக்காளர்கள் பயன்படுத்தி வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வழிகாட்டுதலுடன் படிவத்தினை பூர்த்தி செய்யலாம்.

இதன் தொடர்ச்சியாக, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களிடம் நேரடியாக வருகை தந்து படிவத்தினை வழிகாட்டுதல்கள் வழங்கி பூர்த்தி செய்யவும், படிவத்தினை மீளப்பெறும் நடவடிக்கைகளையும்

மேற்கொள்வார்கள். இப்படிவத்தினை பூர்த்தி செய்யும் பொழுது வாக்காளர்கள் தங்களது ஆதார் அட்டை உள்ளிட்ட எந்த ஆவணங்களும் வழங்குவது கட்டாயமில்லை.

வாக்காளர்கள் பூர்த்தி செய்த கணக்கீட்டுப் படிவங்களை வருகின்ற 04.12.2025க்குள் வாக்காளர்களிடமிருந்து பெற்று, அதனை இந்திய தேர்தல் ஆணையத்தின் வாக்குச்சாவடி நிலை அலுவலருக்கான செயலியில் பதிவேற்றம் செய்யும் பணிகள் முடிக்கப்பட வேண்டியுள்ளதால், வாக்காளர்கள் 04.12.2025 வரை காத்திராமல் தாங்கள் பெற்றுக்கொண்ட கணக்கீட்டுப் படிவங்களைப் பூர்த்தி செய்து, தங்களிடம் வருகை தரும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் ஒரு படிவத்தினை வழங்கி, மற்றொரு படிவத்தில் உரிய ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரால் நியமனம் செய்யப்பட்ட அந்தந்த வாக்குச்சாவடி முகவர்கள் மூலம் இந்த கணக்கீட்டுப் படிவத்தினை, மற்றொரு படிவத்தில் அவர்களிடம் ஒப்புதல் பெற்று வழங்கலாம் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**